# ஹதீஸ்களும் அதன் வகைகளும்

الحديث وأنواعه

Moulavi M.M. Zaky B.A. (Hons)

**பகுதி : (2)**

## A. பலவீனமானவை:

இஸ்லாமிய அறிஞர்களால் "பலவீனமானவை" என ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அறிவிப்புக்கள் உள்ளன.

உபதேசங்கள், பாவங்களையும் அமல்களில் அலட்சியம் காட்டலையும் கண்டித்தல் போன்ற விடயங்களில் பலவீனமான அறிவிப்புக்களை நடைமுறைப்படுத்தலாம் என்றொரு செய்தி, பொதுவாகவும், பரவலாகவும் பேசப்படுகின்றது.

இந்தக் கருத்தின் அடிப்படையில் பலவீனமான அறிவிப்புக்களை நகல் செய்யவும், அவற்றின் அடிப்படையில் அமல் செய்யவும் அதிகமானோர் துணிந்து விட்டனர். இதன் காரணமாக மார்க்கத்தில் எந்த ஆதாரமுமற்ற பல விஷயங்கள் இபாதத்துக்கள் என்ற பெயரில் இடம்பிடித்துக் கொண்டன. இவை சமூகத்திலிருந்து அவசரமாக களைந்தெறியப்பட வேண்டிய தேவையும் அவசியமும் தென்படுகின்றது. அப்போது தான் ஆதார பூர்வமான நபி வழிகளை அதிக அளவில் நடைமுறைக்குக் கொண்டு வரமுடியும்.

மேற்குறிப்பிடப்பட்ட அம்சங்களில் பலவீனமான செய்திகளை ஆதாரமாகக் கொள்ள முடியும் என்பதற்கு ஹதீஸ் கலையின் பிரபல அறிஞர்களான இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள், இமாம் அப்துர்ரஹ்மான் பின் மஹ்தீ (ரஹ்) அவர்கள், இமாம் அல்துல்லாஹ் பின் அல் முபாரக் (ரஹ்) அவர்கள் ஆகிய மூவரும் கூறிய ஒரு கூற்றை ஆதாரமாகக் கொண்டுள்ளனர். இவர்கள் கூறியதாவது:

ஹலால் மற்றும் ஹராம் தொடர்பான சரீஅத் சட்டங்கள் அடங்கிய ஹதீஸ்கள் நமக்கு அறிவிக்கப்படும் போது அதில் கடுமையாக இருந்து (நம்பகமான செய்திகளை மாத்திரமே) ஏற்றுக்கொண்டோம். சிறப்புக்கள் போன்ற அம்சங்களில் அவ்வளவு உறுதியாக (கடுமையாக) இருக்கவில்லை.

இவர்களுடைய இக்கூற்றை மிகவும் பிற்பட்ட காலத்தவர்கள் பலர் தவறாகவே புரிந்து கொண்டுள்ளனர். ஏனெனில், இவர்களுடைய காலத்தில் ஹதீஸ்கள் இரு வகைகளாக மாத்திரமே தரப்படுத்தப்பட்டிருந்தன. அவையாவன:

1) ஸஹீஹ் (ஆதாரபூர்வமானவை)
2) ளஈப் (பலவீனமானவை)

ஆகவே இவர்களுடைய காலத்தில் ஹதீஸ்கலை நடைமுறையில் "ஹஸன்" எனும் வகை அறிமுகமாகி இருக்கவில்லை.

ஹதீஸ்கலை வரலாற்றில் முதன்முதலில் "ஹஸன்" எனும் வகையை தனியாகப் பிரித்து நோக்கியவரும் அறிமுகப்படுத்தியவரும் இமாம் திர்மிதி (ரஹ்) அவர்களாவர். இவர் "ஹஸன்" என்று தனியாக அடையாளப்படுத்த வருகின்ற செய்திகள் இவருக்கு முன்னைய காலப்பகுதியில் "ளஈப்" என்ற வகையிலையே சேர்த்து நோக்கப்பட்டன என்பது இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

இங்கு "ஹஸன்" என்பது "ஸஹீஹ்" எனும் வகையை விடத் தரத்தில் குறைந்ததும், "ளஈப்" எனும் வகையை விடத் தரத்தில் கூடியதுமான ஹதீஸ்களைக் குறிக்கின்றது. இந்த வகையைச் சார்ந்த ஹதீஸ்களை ஏற்று நடை முறைப்படுத்த வேண்டும் என்பது அறிஞர்கள் மத்தியில் காணப்படுகின்ற ஏகோபித்த கருத்தாகும்.

ஆகவே, இமாம்களான அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்), அப்துல்லாஹ் பின் அல்முபாரக் (ரஹ்), அப்துர்ரஹ்மான் பின் மஹ்தீ (ரஹ்) போன்றோருக்கு முற்பட்டகாலத்தில் கூறப்பட்ட கூற்றானது, இமாம் திர்மிதி (ரஹ்) அவர்களுக்குப்பிற்பட்ட கால ஹதீஸ்கலை நடைமுறையில் "ஹஸன்" எனும் வகையைக் குறித்து நிற்கின்றது. இதனைவிடத்தரத்தில் குறைந்த "ளஈப்" எனும் வகையைக் குறிப்பிடுவதில்லை. ஏனெனில், இவர்கள் பொதுவாகப் பலவீனமான ஹதீஸ்களை ஏற்று நடைமுறைப்படுத்தவோ, இவற்றை ஏற்று நடைமுறைப்பத்துவதை அங்கீகரிக்கவோ இல்லை.

மேற்படி மூவரினதும் கூற்றைப் பிழையாக விளங்கிக் கொண்டதன் பின்னனியில், "அமல்களின் சிறப்புச் சார்ந்த விவகாரங்களில் பலவீனமான ஹதீஸ்களை ஏற்று நடைமுறைப்படுத்தலாம் என்றொரு கருத்தும் அறிஞர்கள் முதற்கொண்டு பாமரர்கள் வரை அனைவர் மத்தியிலும் பரவலாகப் பேசப்படுகின்றது.

சிறப்புக்கள், உபதேசங்கள், கதைகள் போன்ற அனைத்தும் சன்மார்க்க அறிவுரைகளின் உப அலகுகள் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அவ்வாறே அவை சரீஅத்தின் கிளைகள் என்பதிலும் சந்தேகமில்லை. ஆகவே, இவ்வாறான அம்சங்களில் பலவீனமான ஹதீஸ்களை ஆதாரமாகக் கொள்ள வேண்டிய அவசியமோ தேவையோ இல்லை. ஏனெனில், எந்த விடயத்திலும் பலவீனமான ஹதீஸ்களில் நாட்டம் கொள்ளத் தேவையில்லாத அளவுக்கு, ஆதாரபூர்வமான செய்திகள் தாராளமாகக் காணப்படுகின்றன. மேலும், சரீஅத்துடன் தொடர்பான எந்த விவகாரத்திலும் உறுதியான கருத்தைத் தருகின்ற ஆதார பூர்வமான செய்திகள் அன்றி வேறெதும் ஆதாரமாக மாட்டாது.